சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

Vol IX. தொகுதி ௯. | September 1913. செப்டம்பர் 1913. | No 2 பகுதி ௨

தமக்கு மருத்துவர் தாமே.

ஒவ்வொருவரும் சுகமாகவிருத்தற்கேது பிணியில்லாதிருத்தலேயாம். பிணியில்லாதவரே, சுகமாக வாழ்தற்குரியவராவர்; மற்றையோராகாரென்பது "நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்" என்னும் பழமொழியா லினிது விளங்குவதாம். நாம் கூடுமானவளவும் நோயில்லாது வாழவேண்டுமென்று விரும்புகின்றவர் மனம்போனவழிபோகாது குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுகன் (பாகன்) போல மனத்தை யிடமறிந்து செலுத்தும் அறிவுடையவராதல் வேண்டும். மனம்போனவழிபோகாது, மருத்துவநூற் கூறியவா றொழுகுகின்றவர் தாம் கூடுமானவளவும் பிணியின்றி வாழ்வதமையும். தூண்டில்முள்ளிலுள்ள இரையை விழுங்கியமீன் அதினின்றுமீள வகையறியாது துன்புறுவதுபோல மிகவதிகமாக வுணவினை யுண்பவர் பிணியினின்றும் நீங்க வழியறியாது துன்புறுகின்றவரா யிருக்கின்றனர். நன்றாகப் பசியெடுத்தபிறகு சீரணிக்குமளவாக வுணவினை அரைவயிறாக வுண்டு, கால் வயிறுநிரையவுண்டபின்னீரருந்துகின்றவர்க்குப் பெரும் பான்மையும் பிணியுண்டாவதே யில்லை; பிணிவருதற்குக் காரணம் உணவினையதிகமாக மலைப்பாம்புபோலுண்டு, அது சீரணமாவதற்கு முன் மேலுமேலு முணவினை யுண்பதேயாம். உணவு விஷயத்தில் மிகுவிழிப்பாக விருப்பதே பெரும்பான்மையும் பிணி வாராமைக்குக் காரணமாம். பிணி பலவாற்றான் வருவதாயினும்,

அது பெரும்பான்மையும் அளவறிந்துணவினையுண்ணாமையாலே யே வருகின்றது. முன்னுண்டவுணவு நன்றாக்ச் சீரணமாயபிறகு உடம்பினிலைக்கேற்றவாறாக வுணவுண்டு ஒழுகுவோர்க்குப் பிணி வருவதின்றென்பது "மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந் திய, தற்றதுபோற்றி யுணின்" என்று திருக்குறள் கூறுவதால் நன்கு விளங்கும்.

உடம்பு பிணியின்றி யிருந்தாற்றான் மனம் தெளிவாக விருக் கும். மனம்தெளிவாகவிருத்தற்குக் காரணம் உடம்புபிணியற்றிருப் பதாகலின், கூடுமானவளவும் பிணியையொழிக்கமுயலுதல்வேண்டும். பிணியுடையார் தமக்கும்பிறர்க்கும் ஒருவாற்றானும் பயனுடைய வராகாதுபோதல் நிச்சயமாதலின், தமக்கும்பிறர்க்கும் பயன்படு மாறு உடம்பினைப் பிணியில்லாதிருக்குமாறு முயன்றொழுகுதல் அத்தியாவசியகமாம். பிணிவந்துபெருகியபோது ஒருவேலையுஞ் செய்தற்கு முடிவதில்லை. பிணியுடையார்பிறர்க்குச் சுமையாகவு மிருக்கின்றனர். பிணிவாராதிருக்குமாறு செய்தற்கு நமக்குச்சாம ர்த்தியமின்றென்று கருதிச்சோம்பியிருப்பது ஒருபோதுமாகாது. பழவினையால் வரும்பிணிகளைத்தீர்ப்பது நமக்கியல்வதன்றாயினும், உணவுசெயல்களது ஒவ்வாமையால் வரும்பிணிகளைத்தீர்ப்பதுநமக் கியல்வதாம். உணவுசெயல்களது ஒவ்வாமையால் வரும்பிணிகளை யொழிப்பதுபற்றியும், அவை வராமைபற்றியும் மிகுவிழிப்பாக விருத்தல்வேண்டும். உணவும்செயல்களும் உடம்பினிலைக்கு மிகு தியாகவேனும் குறைவாகவேனும் இருக்குமாயின், வாதநோய், பித்தநோய், சிலேத்மநோய் என்பவற்றுள்யாதாவதொன்று வந்து துன்புறுமாறு செய்கின்றது. அஃதுள்ளவளவும் அதிற்றால் பிணிக் கப்பட்டவர் வேறிடத்திற்குச் செல்வதற் குரிமையுடையவராகா மைபோல முடங்கிக்கிடக்குமாறு சம்பவிக்கின்றது. இக்காரணம் பற்றித்தான்நோய் "பிணிக்கப்படுதலின் பிணியெனப்படும்" என்று கூறப்படுகின்றது. தத்தம் உடம்பினிலைக்கேற்ற வுணவும் செயல் களுமுடையவராயிருப்பவர்க்குப் பிணிவருவதுபெரும்பான்மையு மின்றாம். உணவுசெயல்களது ஒவ்வாமையால் பிணிவருகின்ற தென்பது:—

"கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலான் கருதிய விசாரத் தினால், நடுவழி நடக்கையால் மலசல மடக்கையால் கனிபழங் கறி

யுண்ணலால், நெல்லினால் உமியினால் உண்டபின் மூழ்கலால் நித்திரைக ளில்லாமையால், நீர்ப்பகையி னால்பனிக் காற்றினுடல் நோதலால் நீடுசருகிலை யூறலால், மெல்லிநல் லார்கலவி யதிகமுள் விரும்பலால் விழ்மலம் சிக்குகையினால், மிகுசுமை யெடுத்தலால் இளவெயிற் காய்தலால் மெய்வாட வேலை செயலால், வல்லிரவிலேதயிர்கள் சருகாதி யுண்ணலால் வன்பிணிக்கிடமென்பர்காண்'' என்று குமரேச சதகம் கூறுவதா லினிது விளங்கும்.

கல்மயிருள்ள வுண வுண்டல், சீரணிக்கு மளவறியா துணவினை மிகுதியாக வுண்டல், வருவது வரும்; போவது போம்; வருவதும் போவதும் நம்வசத்திருப்பன வன்றென்று கருதாது பெற்றவற்றைச் சிறிதாகவும் பெறாதவற்றைப் பெரிதாகவு மெண்ணி விசாரப்படுதல், வெகுதூர நடத்தல், மலசலமடக்கல், பழஞ்சோறு பழங்கறி முதலியவற்றையுண்டல் முதலியவற்றால் பிணி வருவதாக விருத்தலின், அவ்விஷயங்களில் மிகுவிழிப்பாக விருந்தொழுகுகின்றவர் தமக்குத்தாமே மருத்துவ ராவர்; அவர்க்கு மருத்துவரி னுதவி பெரும்பான்மையும் வேண்டப் படுவதின்றாம்.

மக்களுடம்பு அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும்பெறுவதற்குச்சிறந்தகாரணமாயிருத்தலின், இவ்வுடம்பினைப் பொன்னே போற் போற்றி யொழுகுதல் வேண்டும். இவ்வுடம்பு கிடைப்பது மிகவரிதாகலின், இதனைப் பிணிக்கிடமாக்காதிருக்க, எப்போதும் முன்னுண்டவுணவு நன்றாகச் சீரணமான பிறகே உண்ணப் பழகிவருதல் வேண்டும். இதனைக் கவனித்து வருபவர் ஏனையவற்றை நிச்சயமாகக் கவனித்து வருவரென்பது நிச்சயமாம். இவ்வுடம்பு பிணிக்கிடனாகாது நெடுங்காலமிருந்தாற்றான் இதுவாயிலாகப் பெறுவதற்குரிய அறம்பொருளின்பம் வீடுகளையடைவது வாய்க்கும். உடம்பினைப் பற்றிக் கவனியாதிருப்பவர் வேறெதனைக் கவனித்தற்குரியவ ராவர்? உடம்பு பிணியின்றி நன்றாகவிருந்தால் மனத்தால் நாம் செய்வன தவிர்வனவற்றைச் செப்பமாக உய்த்துணர்ந்து செய்து சுகம்பெறுவோம். யோகாப்பியாசிகள் காயசித்திசெய்வதெதற்கு? உடம்பு தம்வசமாக இருக்கவேண்டு மென்பதற்கன்றோ? உடம்பு பிணி வசப்பட்டிருந்தால் எதனையாவது செப்பமாகச் செய்வ தமையுமோ? உடம்பு பிணியின்றி நெடுங்கால மிருந்தாற்றான் நாம் இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடு என்பனவற்றைமுறையேபெறு

வோம். மிகப்பசித்தபிறகே உடம்பினிலைமைக்கு ஏற்றவாறு மாறுபாடில்லாதவுணவைக்காலவியல்புக்கு மாறுபடாமலுண்டு வந்தால் பிணி பெருகுவதற் கிடமின்றாதலின், நாம் அவ்வாறுண்டுவந்தால் மனமொழிமெய்கள் நம்வசமாகி வாழ்தற்குரியவராவோம். எப்போது மனமொழிமெய்கள் நம் வசமாகின்றனவோ அப்போது நாம் தூயராவோமென்பதற்கொரு சிறிது மாசங்கையின்றாம்.

நாம் விரும்புவதென்றும் இன்பமே யாகலின், அவ்வின்பம் மீதூண்விரும்பல் முதலியவற்றால் வருவதில்லை யென்று தெளியவறிந்தொழுக வேண்டும். மீதூண்விரும்பல் முதலியன நம்முடைய செயலாகவிருத்தலின், அவற்றை விடுதலே நமக்கு நல்ல வைத்தியமாம். மருத்துவர்தயவு பேருணவுகொள்ளுதல் முதலியவற்றை யுடையவர்க்கே வேண்டியதாம். எப்போதும் பத்தியமாக உணவுண்டு கடுவழிநடத்தல், மலசலமடக்கல் முதலியன வின்றியிருப்பவர்க்கு மருத்துவர் தயவு எற்றிற்காம்? அவர் தமக்குத் தாமே மருத்துவராவர். தேனும் நெய்யும் தம்முளொத்துக் கூடியவிடத்து நஞ்சாதல்போல, பேருணவு பெருநடை முதலியவற்றை மேற்கொண்டவிடத்து உடம்பு பிணிக்கிட மாவதாய்த் துன்பங்களை யோயாது தந்து, அறம்பொரு ளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்களை யடையாவாறு செய்கின்றதென் றுணர்ந்து, பிணியின் வசப்படாதிருக்க நாம்பெரிது முயலுதல் வேண்டும்; முயன்றால் நமக்குநாமே மருத்துவராவோம். பழவினையால் வரும் பிணி பழவினை யொழிந்தபோதன்றி மற்றொன்றாலொழிவதின்மையின், அதுபற்றி யாம் யாது செய்தல்கூடும்? ஆனால் நம்முடைய உணவுசெயல்கள் ஒவ்வாமையில் வரும்பிணிகளுக் காளாகாதிருப்பது நம்முடைய முயற்சியா லாகுமாதலின், அம்முயற்சியைச் செய்து பிணியின்றி யிருந்து செய்வனவற்றைச் செய்து வருவது நமக்கின்றியமையாத கடமையாம். மருந்துண்டு சாகாதிருந்தா ரொருவரு மிலரென்று கருதி விரும்பியவாறு நடப்பது கூடவே கூடாது. பேருணவுகொள்ளல் முதலியவற்றை யுடையோர்க்குப் பிணிபடிக்கடி வருவது பிரத்தியட்சானுபவமா யிருத்தலின், உடம்போடு கூடியுள்ளவளவும் பிணி வருவதற்கேதுவாய பேருணவு கொள்வது முதலியனவின்றி யிருக்கப் பெரிது முயல்வோமாக.

ஆத்தி சூடி.

"துன்பத்திற் கிடங்கொடேல்"
"நுண்மை நுகரேல்"
"நோய்க்கிடங்கொடேல்"
"மீதூண்விரும்பேல்"

திருக் குறள்.

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போனிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்"
"தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயளவின்றிப் படும்"

இவை யிங்கு நன்கு கவனித்தற் குரியனவாம்.

ஸநாதன மாநவ தர்மம்.

1. ஸத்யம்.

ஸத்யம் சொல்லவேண்டும், பிரியத்தைக் காட்டவேண்டும், பிரியமாயினும், பொய் சொல்லுதல் கூடாது. இது ஸநாதனதர்மமாம். 1

எவன் மனதிலிருப்பதை ஸாதுக்களிடம் மாற்றிப் பேசுகின்றானோ அவன் உலகில் பாபம் செய்தவர்களுக்குள் முன்னிற்பவனாவன், திருடனாவன், ஆத்மஹத்தி செய்தவனாவன். 2

பொருள்யாவும் வாக்கில் அடங்கியிருக்கின்றன; அவை வாக்கை மூலமாகக்கொண் டிருக்கின்றன; வாக்கினின்றும் வெளிவருகின்றன. அந்த வாக்கை எவன் பொய்யாக்கு கின்றானோ அந்த மானிடன் எல்லாவற்றையும் திருடியவனாகின்றான். 3

2. தர்மாசரணம்.

ஸந்தோஷம், பொறுமை, உள்ளிந்திரிய நிக்ரஹம், திருடாமலிருப்பது, பரிசுத்தம், (வெளி) இந்திரிய நிக்ரஹம், சாஸ்திரஞானம், ஈஸ்வரஞானம், ஸத்யம், கோபமில்லாமை என்னுமிந்தப் பத்தும் தர்மலக்ஷணமாம். 1

புருஷன் நாசமடைந்தாலும் ஸுஹிருதமாகிய தர்மம் ஒன்றே அவனைத்தொடர்ந்து வருகின்றது. மற்றவை யாவும் சரீரத்துடன் நாசமடைகின்றன. 2

பாபம்செய்பவர்கள், நம்மை ஒருவரும் பார்க்கவில்லையென்றெண்ணுகிறார்கள். அவ்வாறு பாபம்செய்பவர்களைத்தேவர்களும், அவர்களுடைய அந்தர்யாமியாகிய புருஷனும் பார்க்கின்றனர். 3

ஹிம்ஸையில்லாமை, ஸத்யம், திருடாமலிருப்பது, பரிசுத்தம், இந்திரிய நிக்ரஹம் ஆகிய இந்தத் தர்மங்கள் நான்கு வர்ணங்களுக்கும் பொதுவாக உள்ளன என்று மநு கூறுகின்றார். 4

தேனீக்கள் புட்பத்தைத் தேடுவதுபோல நாம் ப்ராணிகள் யாவற்றையும் உபத்ரவிக்காமல், பரலோகத்தின் ஸஹாயத்தைக் கருதித் தர்மத்தை எப்போதும் தேடவேண்டும். 5

பரலோகத்தின் ஸஹாயத்தைக் கருதி, தந்தையும், தாயும், தமையனும், தாரமும், பந்துவும் துணையாகமாட்டார்கள். தர்மம் ஒன்றுதான் முக்கியமானதுணையாய் இருக்கக் கூடியது. 6

கட்டைக்கும் ஓட்டாங்குச்சுக்கும் ஸமமாகிய ஒருவனது சவமான தேஹத்தைப்பூமியில் விட்டுப் பந்து ஜனங்கள் கவனிக்காமல் செல்லுவார்கள். தர்மம் ஒன்றே அவனைத்தொடர்ந்து அநுஸரிக்கிறது. 7

ஆகையால், ஸஹாயத்திற்காக எப்போதும் தர்மத்தை உம்முடையதாகச் செய்தல்வேண்டும். ஒருவன் தர்மத்தை ஸஹாயமாகக்கொண்டு, தாண்டமுடியாத அஞ்ஞானத்தைத்தாண்டுகிறான்.

தனக்குரிய தர்மமானது குணமில்லாவிட்டாலும் சிறந்ததாகும். பிறாது தர்மத்தை நன்கு அனுஷ்டித்தாலும் அதுசிறந்ததாகாது. பிறர்தர்மத்தால் ஜீவிப்பவன் ஜாதிப்ரஷ்டத்தை யுடனேயடைகின்றான். 9

3. பித்ரு பக்தி.

தாய்தந்தைகள், புத்திரர்களின் நன்மையில் எந்தக்லேசத்தைப் பொறுக்கின்றார்களோ அப்பொறுமைக்கு பிரதியுபகாரத்தை அநேகவருடங்கள் முயன்றாலும் செய்தல் முடியாது. 1

அந்தத் தாய்தந்தைகளுக்கும் ஆசிரியருக்கும் எப்போதும் பிரியத்தைச் செய்தல்வேண்டும். அவர்கள் மூவரும் ஸந்தோஷமடைந்தால் தவம் யாவும் முடிவுபெற்றனவாகும். 2

அந்தமூவருக்குப் பணிவிடை செய்வது சிறந்த தவமென்று சொல்லப்படுகிறது. அவர்களுடைய உத்தரவன்றி வேறு தர்மத்தைச் செய்வது கூடாது. 3

கிருஹஸ்தன் இந்தமூவவிடத்திலும் தவறுமலிருப்பானுயின் அவன்மூன்று உலகங்களையும் ஜயிக்கின்றான், தன் தேஹத்தால் ப்ரகாசித்துக்கொண்டு தேவனைப்போல ஸ்வர்க்கத்தில் ஸந்தோஷிக்கிறான். 4

அவன், மாதாவிடத்துக்கொண்ட பக்தியால் இவ்வுலகையும், பிதாவிடத்துள்ள பக்தியால் ஸ்வர்க்கத்தையும், குருசேவையால் பிரஹ்மலோகத்தையும் அடைகின்றான். 5

எவன் இந்தமூவரையும் ஆதரவுசெய்கின்றானே அவன் தர்மங்களனைத்தையும் ஆதரவுசெய்தவனுகின்றான். எவன் இந்த மூவரையும் ஆதரவுசெய்யவில்லையோ அவனுடைய கிரியைகள் யாவும் வீணுகின்றன. 6

எதுவரையில் இந்தமூவரும் ஜீவித்திருக் கின்றார்களோ அதுவரையில் அவர்களின் சேவையைவிட்டு வேறு எதையும் செய்வதுகூடாது. இவ்வுலகுக்குரிய நன்மையும் பரலோகத்திற்குரிய நன்மையும் விரும்பியவன் எப்போதும் இந்த மூவருக்குமே ஊழியஞ்செய்தல் வேண்டும். 7

அவர்களுக்கு உபரோத (விரோத)மின்றியே பரலோகத்திற்குரிய எதெதைச் செய்கின்றானே அதனை மனத்தாலும் வாக்கினுலும் செய்கையாலும் அவர்களிடத்துத் தெரிவித்தல் வேண்டும். 8

புருஷனுக்கு இந்த மூவர்களிடத்தில் விசேஷ காரியம் சித்தியாகின்றது. இது ப்ரத்யக்ஷதர்மம்; மற்றது கௌண தர்மமாம். 9

4. குருபக்தி.

எவன் சாஸ்திராப்யாஸத்தின்பொருட்டு அற்பமாகவோ மகத்தாகவோ உபகாரம் செய்கின்றானே அந்த உபகாரத்தால் (உபகரிக்கப்பட்டவன்) அவனையும் குருவாக அறியவேண்டும். 1

எப்போதும் குருவின் ஸந்நிதானத்தில் சிஷ்யனுக்குப் படுக்கையும் ஆஸனமும் தாழ்ந்திருக்கவேண்டும்; குருவின் எதிரில் கைகால்களை நீட்டிக்கொண்டிருத்தல் கூடாது. 2

குருவின் பெயரை அவரில்லாத விடத்திலும் சொல்வது கூடாது. குருவின் நடை ஸம்பாஷணை சேஷ்டை இவற்றையும் அநு சரிப்பது கூடாது. 3

பிறர் குருவைப்பற்றி இல்லாத தோஷத்தை யுரைக்குமிடத்திலாவது இருக்கும் தோஷத்தைச் சொல்லு மிடத்திலாவது சிஷ்யன் இருந்தால் செவிகளை மூடிக்கொள்ள வேண்டும்; அல்லது அந்த இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்காவது செல்லவேண்டும். 4

சிரேஷ்டராகிய குருவிற்றிருந்த சயனத்திலாவது ஆசனத்திலாவது உட்காருவதுகூடாது. தான் சயனத்திலிருந்தாலும் ஆஸனத்தி லிருந்தாலும் குருவைக் கண்டவுடன் எழுந்து வணங்க வேண்டும். 5

5. சிஷ்யா சரணம்.

குரு உத்தரவிட்டாலும் உத்தரவிடாவிட்டாலும் எப்போதும் சிஷ்யன் அத்யயனம் செய்வதில் முயல வேண்டும். ஆசிரியருடைய நன்மையாகிய காரியங்களையும் கவனிக்க வேண்டும். 1

சரீரம் வாக்கு புத்தி இந்திரியங்கள் மனம்இவற்றையடக்கிக் குருவின் முகத்தைப் பார்த்துக் கைகூப்பிக்கொண்டிருக்க வேண்டும். 2

சிரேஷ்டர்களாகிய குரு புத்திரர்களிடத்திலும் குருவின் பந்து ஜனங்களிடத்திலும் எப்போதும் குருத்துவம் பாராட்டி வர வேண்டும். 3

பெரியோர் வந்தவுடன் யுவாவுக்கு ப்ராணன்கள் உயரக்கிளம்புகின்றன. பெரியோரைக் கண்டு எழுந்திருப்பதாலும் நமஸ்கரிப்பதாலும் மறுபடியும் அவர்களை ப்ராணன்க ளடைகின்றன. 4

நமஸ்காரம் செய்வதைச் சீலமாகக் கொண்டவனும் எப்போதும் பெரியோர்களை ஸேவிப்பவனுமாகிய புருஷனுக்கு ஆயுள் வித்தையசஸ் வலிமை என்னும் இந்த நான்கும் விர்த்தியடைகின்றன.

6. சிக்ஷணப்ரகாரம்.

ப்ராணிகளிடத்து ஹிம்ஸையின்றியே நன்மையைக் கட்டளையிடவேண்டும். மதுரமும் ஸுந்தரமுமான வார்த்தையை உபயோகப்படுத்தல் வேண்டும். 1

7. சிஷ்ய யோக்கியதை.

எந்தச் சிஷ்யனிடத்துத் தர்மம் அர்த்தம் இவை போன்ற சிச்ருஷை என்பவையில்லையோ அவனிடத்து வித்தையாகிய நல்ல விதையை ஊஷர பூமியிற்போல் உபயோகிப்பது கூடாது. 1

8. உத்யோகம்-முயற்சி.

முன்னுள்ள ஐச்வர்யங்களில்லாமையால் தன்னை அவமதித்துக் கொள்வது கூடாது. இந்த ஐச்வர்யம் துர்லப மல்ல என்றெண்ணவேண்டும். மரண மடையும் வரையில் பொருளை விரும்ப வேண்டும்.

ராமாயணம்-நடேச சாஸ்திரியார்.

ஞாபகவிருத்தி.

(1) ஞாபகமென்பதென்ன ? இறந்தகாலத்திற் செய்தவற்றை யாவது, நடந்தவற்றையாவது நினைக்கும் ஓர் ஆற்றலே ஞாபகமெனப்படும். பாடசாலைகளில் மாணவர் பலவகுப்புக்களில்வாசித்த பாடங்கள் பரீக்ஷை முதலியகாலங்களில் அவர்களுக்கு உதவுவது ஞாபகத்தினாலேயேயாகும். நாம் ஒருவரைக் கண்டவுடன், அவர்நமக்குச் செய்துள்ள நன்மை தீமைகளை நினைப்பதும், அவரைப்பற்றிப் பிறர் நம்மிடம் கூறியதைக்கருதுவதும், இவை போன்ற பிறவும் ஞாபகத்தின் பயனேதவிரவேறல்ல.

(2) ஞாபகசக்திமாத்திரம் நமக்கில்லையாயின், நாம்நாகரீகத்தில் விருத்தியடைதல் முடியாது; நமது அறிவு விருத்திக்கும், ஆன்மவளர்ச்சிக்கும், அன்பின்பெருக்கிற்கும் சிறிதேனும் வழியில்லை. ஞாபகசக்தி உயிர்ப்பிராணிகளிடம் அமைந்திராவிடின், உலகம் இன்றைக்கிருக்கும் நிலைமையைப் பார்க்கினும்எத்தனையோ மடங்கு தாழ்ந்தஸ்திதியிற்றான் இருக்கக் கூடுமென்பதற் கையமில்லை.

(3) நிகழ்காலத்தில் அநுபவிப்பதெல்லாம் இறந்தகாலத்திலிருந்தநம் முன்னோர்களின் முயற்சியின் பயனேயாகும் உதாரணமாக:—புகைவண்டி, கப்பல், அச்சடிக்கும் யந்திரமுதலியவற்றால் நாம் அதிக பயனைப் பெறுகின்றோம். அவையாவும் நம்முன்

னோர்களின் முயற்சியாலன்றோ உண்டாயின. அதுபோல நமது முயற்சியினால் நம்முடைய பின்சந்ததியார் மிகுந்த பலனை யடையவேண்டுவது முற்றிலும் பிரயமேயாகும். அதற்கு நமது ஞாபகசக்தி இன்றியமையாததாகும். அதுவே நமது ஒவ்வொருவேலைக்கும், உடம்பின் இயக்கத்திற்கும் உயிர்போன்று வேண்டப்படுவது. ஞாபகமின்றி, நாம் எவ்வளவுகற்றாலும் பிரயோசனமேதேனுமுண்டா? ஆகலினாலே ஞாபகத்தை விருத்தி செய்தலே நமது முக்கியமானநோக்கமாயிருக்கவேண்டும். இயற்கையிலேயே ஞாபகசக்தி யமைந்திருந்தபோதிலும் சில உபாயங்களினால் அதனை மிகவும் விருத்திசெய்து விடலாம்.

(4) அவ்வுபாயங்களை யறிவதன் முன்னர், ஞாபகம் குறைவதற்குக்காரணங்களென்னவென்றுபார்த்தல் அவசியம். அதிகப்படிப்பு, குறைந்தபடிப்பு, தியானம் அல்லது சிந்தனையின்மை முதலியன ஞாபகத்தைக் குறைக்கக் கூடியவையென்று ஆங்கில நிபுணரொருவர் கூறுகின்றார். அதிகப்படிப்பு ஒருவன் உண்ணும் மிதமிஞ்சிய உணவுக்குச்சமமென்று கூறலாம். எவ்வளவு ஆகாரம் நம் உடம்பின் பாதுகாப்புக்கு வேண்டுமோ, அவ்வளவுதான் தேகசௌக்கியத்தைக் கொடுக்கும். அதிகஆகாரம் அஜீரணத்தை உண்டுபண்ணிக் கடைசியில் தேகபலத்தைக்குறைக்கின்றது. ஆகாரம் அளவுக்குக் குறைந்தாலும் தேகசுகம்குறைகின்றது; சரீரத்தின் கருவிகள் பலவீனத்தை யடைகின்றன. அதுபோலவே, குறைந்தபடிப்பும் நமக்குக் கெடுதியாகவே முடிகின்றது. இனித் தியானமின்மையென்பது நாம்படித்ததை படிக்கடி சிந்தித்துக் கொள்ளாமையைக் குறிக்கும்.

"வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய்திடல்."—நீதிநெறிவிளக்கம்.

தான்கற்றதை ஞாபகத்தில்வையாது மேன்மேலும் கற்றல், கையிலுள்ள பொருளைக் கடலிற்போட்டுவிட்டு, அரிப்பரித்துப் பொருள்தேடுவதை யொக்கும்.

(5) இனி ஞாபகவிருத்திக்கு அநுகூலமான உபாயங்களை ஒருசிறிதுபார்த்தல் மிகுந்தபலனைக்கொடுக்கும். ஞாபகத்தைக்குறைக்

கக்கூடிய அதிகப்படிப்பு, குறைந்தபடிப்பு, தியானம் அல்லது சிந்தனையின்மை என்பவற்றை நீக்கவேண்டும். அஃதாவது சரியான அளவுபடிப்பும், சிந்தனையும் ஒருங்கேவேண்டுமென்பதாம்.

(6) பெரியோரால் அருளிச்செய்யப்பட்ட செய்யுள்களைப் படித்து, பாராமல் ஒப்புவித்தல் ஞாபகசக்தியை மிகவிருத்தி செய்யும். உதாரணமாக:—பூர்விக ஆரியர்கள் மிகுந்தஞாபகசக்தியுடையராயிருந்தனர். அதற்குக்காரணம் இருக்குவேதம் முதலியன எழுதப்படாமல் வாய்மூலமாகவே கற்பிக்கப்பட்டுவந்தனவேயாம். இக்கருத்தைச் சரித்திராசிரியர்கள்தெரிவித்திருக்கின்றனர்.

(7) ஒவ்வொருநாளும்நாம்நமதுநேரத்தை எவ்விதம்செலவழித்தோமென்பதைச் சிந்திக்கவேண்டும். அங்ஙனம் சிந்திப்பவனது ஞாபகம் அதிகமாய் அபிவிருத்தி யடைவதோடு, அவனதுவாழ்நாளே மிகச்சிறந்ததொன்றாகுமென்று அறிஞரனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். இதற்குத்தினசரிக்குறிப்பு முதலியவைவைத்திருக்கும் வழக்கம் சிலாகிக்கத்தக்கது.

(8) மேலும், சிலகாலம் இம்மாதிரிப் பழகி வருதல் மாத்திரம் போதாது. எப்பொழுதும் ஒரேமாதிரியாக அப்பியசித்தல் வேண்டும். அதனோடு அனைத்திலும்முக்கியமாய்த்தேகசௌக்கியம் வேண்டுமென்பது சொல்லாமலேயமையும். முடிவில் நாம் ஞாபகசக்தியைக் குறைக்கும் காரணங்களை நீக்கவும், அதன் விருத்திக்குரிய உபாயங்களைக் கைக்கொண்டொழுகவும், சர்வசக்தியுடைய ஜகதீசனைப் பிரார்த்திப்போமாக.

நெல்லை மாணிக்கவாசகன்.

கிண்டர்கார்டன் என்னும் பாலபோதனமுறை.

ப்ரோபெல் சரித்திரம்.

பாலபருவம்.

1782 - 1792.

இக்கிண்டர்கார்டன் முறையைக்கண்டு பிடித்தவரும் ஸ்தாபித்தவருமாகிய ஃப்ரெடரிக் ப்ரோபெல் என்பவர் ஜர்மன் தேசத்தில் மத்திய மாகாணங்களிலுள்ள ஒபர்வீஸ்பாக் என்னும் கிராமத்தில் 1782 வருஷம் ஏப்ரல் மாதம் 21ந் தேதி பிறந்

தார். இவர் தகப்பனுர் லூதர்ன் மிஷனைச்சேர்ந்த உபதேசியரா யிருந்தனர். இவர் நற்குண நற்செய்கைகளோடு கூடிய சிறந்த புத்திமான்; ஊக்கமும் மனவுறுதியு முடையவர். இவர் தாயாரும் தெய்வபக்தி சாந்தம் பெருந்தன்மை முதலிய குணங்களா லலங் கரிக்கப்பெற்றவள். இவருடன் பிறந்தவர் ஐவர். அவர்களுள் இவர்தான் கனிஷ்டர். இவர் பிறந்த 9 மாதங்களுக் கெல்லாம் இவர் தாய் தேகவியோகமடைந்தாள். தாயார் இறந்த உடனே இவரைக்கவனிப்பவர் ஒருவருமில்லாமையால் இவர் தகப்பனுர்இவ ரைத் தம்வீட்டுச் சமையல் காரியிடத்தில் விட்டு அவளுடைய பார்வையில் இருக்கும்படி செய்தார். இவளுக்கோ சமையல் வேலை யையும் மற்ற வீட்டு வேலையையும் செய்வதற்கே நேரமிராமை யால் இவள் தன்னிடத்தில் விடப்பட்ட குழந்தையை வெளியே அழைத்துச்சென்று பலவேடிக்கைகளைக்காட்டி வருவதற்குச் சற் றும் முடியாமலிருந்தாள். தகப்பனுருக்கோ அவ்வூரிலுள்ளவர்களு க்குமதவிஷயங்களைப் போதிப்பதற்கும், அவர்களுக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும், கோயில் விஷயங்களைக் கவனிப்பதற்கும், இதரபரோபகாரச் செய்கைகளைச் செய்வதற்கு மே காலம் சரியாயிருந்தது. அதனுல் அவருக்கும் தன் குழந்தை யைக் கவனிக்க முடியவில்லை. ஆதலால் பிரோபெல்லுக்குத் தம் வீட்டுக்குள்ளேயே சமையற் காரியுடன் தனிமையாய் இருக்கு மாறு நேரிட்டது அப்போது தான் விளையாட்டுத் தோழர்களோடு இராததாலும் தமக்கு விளையாடுவதற்குப் பல சாமான்க ளிராமை யாலும் பிரோபெலுக்குச் சந்தோஷமேயில்லை. எத்தனைநாள் தாம் சமையல்பாத்திரங்களைப்பார்த்துச்சந்தோஷிப்பார்? இப்படியிருக்க, ஒருநாள் தம் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள ஒரு கோயிலைப் பழுது பார்ப்பதற்காகச் சில கொல்லத்துக்காரர்கள் வேலைசெய்துகொண் டிருந்தார்கள். அப்போது பிரோபெல் தம் வீட்டுச் சாளரத் தின் வழியாக அவர்கள் வேலைசெய்வதையும், கற்களைபொன்றின் மேலொன்றுய் வைத்துச் சுவர் கட்டுவதையும் பார்த்து அதிக சந்தோஷப்பட்டு அவ்வேலை முடியும்வரையில் அதனையே பார்த் துக்கொண்டு களிகூர்ந்தார். அவ்வேலை முடிந்தபிறகு தாமும் அவர்களைப்போலவே செய்யவேண்டுமென்று ஒரு பலகையை வேறொருபலகையின்மேல் வைத்தும், அதன்மீது மற்றொரு பலகையை வைத்தும் அவை ஒன்றன்மேலொன்றுக வைக்கப்பட் டமையால் உயரமாகத் தோன்றவே அதைப்பார்த்துத் தானும்

கொல்லத்துக்காரனைப்போல் உயரமாகச் சுவர் கட்டிவிட்டதாக வெண்ணிச் சந்தோஷிப்பார். இவ்விதமாய் ப்ரோபெல் விளையாட்டுத் தோழர்களின்றியும், வேடிக்கைப் பொருள்களின்றியும் தம் வீட்டிற்குள்ளேயே சமையல்காரியின் பாதுகாப்பின்கீழ் நான்கு வருஷம் வளர்ந்தார். ப்ரோபெலுக்கு நான்காவது வயது வந்தவுடனே அவர் தகப்பனார் புனர்விவாகம் செய்துகொண்டார். அந்த மாற்றாந்தாய் முதலில் சிலமாதங்கள்வரையில் ப்ரோபெலை அதிக அன்புடன் ஆதரித்துவந்தாள். ஆயினும் தமக்கு ஒருகுழந்தைபிறந்தவுடனே ப்ரோபெலைக் கொடூரமாய் நடத்தத் தலைப்பட்டாள். தகப்பனாரோ வீட்டில் இருப்பதேயில்லை. தாயோ மாற்றாந்தாய். அவளுக்கும் ஒரு பிள்ளைபிறந்துவிட்டது. வேலைக்காரி தன் எஜமானிக்குச் சந்தோஷம் வரும்படி அவளுடைய குழந்தையை எடுத்துக்கொண்டு அன்புடன் சீராட்டுவாளேயொழியத் திக்கற்றதசையிலிருக்கும் ப்ரோபெலை அன்புடன் நடத்துவாளா? ஆதலால் தம்மைக் கவனிப்பவர் வீட்டில் ஒருவரும் இல்லாததை யெண்ணி ஒவ்வொரு சமயத்தில் ப்ரோபெல்வாய்விட்டலறுவார்; வெளியில் எங்கேயாவது ஓடிவிடலாமென்றும் நினைப்பார். சில வேளைகளில் தம்வீட்டிற்கு எதிரிலுள்ள செடிகொடிகளைப் பார்த்துஇயற்கை விசாரத்திலுள்ள ஆநந்தத்தேனைக்குடிப்பார். வீட்டிற்குவந்தால் மாற்றாந்தாயால் கொடூரம்; சற்றுநேரம் வீட்டிற்கு வராவிடிலோ அதற்கும்வேறு தண்டனை. என்னசெய்வார் பாவம். இருபக்கமும் தீப்பற்றி யெரியும் கொள்ளிக்கட்டையின் மத்தியில் அகப்பட்ட சிற்றெறும்பைப்போல் துடிப்பார். மாற்றாந்தாயின் தலையணைமந்திரத்தினால் தம்தகப்பனுக்கும் தம்பேரிலுள்ள நல்ல அபிப்பிராயம் சிறிது சிறிதாகக் குறையவாரம்பித்தது. இவர் தாம் உண்மையைச் சொன்னாலும் தண்டனையடைவது நிச்சயமென்று தமக்குத் தெரிந்ததனால் உண்மையைமறைத்துப் பொய்சொல்லவும் தலைப்பட்டார். இங்ஙனம் சிலவருடங்களுக்குள் தகப்பனுக்குத் தன் பேரில் கெட்ட அபிப்பிராயம் நன்றாய் வேரூன்றி விட்டது. இப்போது ப்ரோபெலுக்கு வயது ஒன்பது. இச்சமயத்தில் ப்ரோபெல் தகப்பனாருடன் தோட்டத்திற்குச் சென்று அவருக்கு உதவியாகச் சிலதோட்டவேலைகளைச் செய்வதனாலும் தோட்டத்திலுள்ள இலைகள் புஷ்பங்கள் முதலியவற்றை யுற்றுப் பார்த்துத் தெரியாத விஷயங்களைத் தகப்பனாரைக் கேட்பதினாலும் தம்மிடத்தில் தகப்பனாருக்குத் தம் மாற்

றாந் தாயால் ஏற்பட்டிருக்கும் கெட்ட அபிப்பிராயத்தைச் சிறிது சிறிதாக மாற்றத் தொடங்கினார். உடனே இவர் தகப்பனார் இவருக்கு எலிமெண்டரி வித்தியாப்பியாஸம் செய்விக்கக் கருதி அக்கிராமத்திலுள்ள ஒரு நல்ல பெண்பாடசாலையில் விட்டார். இப்பாடசாலையானது ப்ரோபெல் தகப்பனார் எந்த மிஷனில் வேலை செய்கின்றாரோ அந்தமிஷன் கோயிலுக்குச் சம்பந்தப்பட்டது. ஆகையால் உபதேசியின் புத்திரனென்று ப்ரோபெலை உபாத்தியாயர்கள் அன்புடன் ஆதரித்து வந்தார்கள். இங்ஙனம் சில நாள் வாசித்துக்கொண் டிருக்கையில் வாசிக்கும் நேரம்போக மற்ற நேரங்களில் ப்ரோபெல் தம் தகப்பனாருடன் வெளியே சென்று அவ்வூராருக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகளைத் தம் தகப்பனார் தீர்க்கும்போது கவனித்துக்கொண்டிருப்பார். ஒவ்வொரு சண்டைக்கும் காரணம் என்ன வென்று நுட்பமாகக் கவனிப்பார். இப்படியிருக்கையில் ஒரு நாள் தம் மூத்த சகோதரனை க்ரிஸ்தப் என்பவன் தன்னைப் பார்ப்பதற்காக வந்தான். உடனே அப்போது ப்ரோபெலும் க்ரிஸ்தபும் புறப்பட்டு வெளியே சென்றார்கள். அப்போது ப்ரோபெல் தம்முடைய நிலைமையையும் தாம் மாற்றாந் தாயால் படுந்துன்பங்களையும் தமது சகோதரனிடத்தில் சொல்லி அழுதார். இதுவேயுமன்றித் தாம் தகப்பனாருடன் வெளியே சென்று கவனித்த சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் பெண்களே காரணமா யிருப்பதை யுணர்ந்து ப்ரோபெல் தம் தமையனை "ஏன் கடவுள் எல்லாரையும் புருஷர்களாகவே சிருஷ்டிக்க வில்லை. புருடரும் பெண்களாக விருப்பதனாலல்லவா பல துன்பங்களுக்குக் காரணமா யிருக்கின்றனர். எல்லாரையும் புருடர்களாக வேனும் பெண்களாக வேனும் சிருஷ்டித்திருந்தால் உலகத்தில் எவ்விதத் துன்பமும் நேரிடுவதற்கு நியாயமில்லையே. ஏன் கடவுள் அங்ஙனம் சிருஷ்டிக்க வில்லை" என்று கேட்டார்? அதற்கு க்ரிஸ்டப் அங்கிருந்த ஒரு செடியின் புஷ்பத்தைப் பறித்து அதிலிருக்கும் ஆண், பெண் அவயவங்களைக் காட்டி அவை ஒன்றோடொன்று சேர்வதனால் வர்க்க விருத்தி யாகின்றதென்று நிதர்சனமாய்க் காட்டி உலகத்தில் மனித ஜாதி விர்த்தியாவதற்காக ஆண் பெண் என்னும் பாகு பாட்டைக் கடவுள் உண்டாக்கி யிருக்கின்றார் என்று ரூபித்தார். (வரும்)

R. சுப்பிரமணிய ஐயர்,
திருவேட்டீசுவரன் பேட்டை.

மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்.

ஒருநாள் ஒரு இராஜ குமாரன் வேலையாட்கள் சிலரோடும் பிரபுக்கள் சிலரோடும் ஒருகாட்டின் வழியே போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியே போய்க் கொண்டிருந்த ஒரு ஸந்நியாசி இராஜதுமாரனிடத்தில் வந்து யாராவது எனக்கு நூறு பவுன் கொடுப்பாரேயாயின், அவருக்கு அந்தப்பவுனைவிட விலையுயர்ந்த புத்திமதி யொன்று நான் சொல்லுவேன்" என்றார். இராஜகுமாரன் அப்படிப்பட்ட புத்திமதியை நாம் கேட்டுத்தெரிந்து கொள்வதசியமென்று கருதி, உடனே அந்த ஸந்நியாசியிடம் நூறுபவுனைக்கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்டவுடன் அச்சந்நியாஸி அரசகுமாரனை ஆசிர்வதித்து, "அப்பனே! நான் சொல்லப் போகிற தொன்றுமில்லை. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன் அதனை நன்றாய் ஆலோசித்துச் செய்தல் வேண்டும். இதனை என்றும் மறத்தல் கூடாது" என்று கூறிப் போய்விட்டார். இதைக்கேட்டதும் கூடவந்தவர்களெல்லோரும் நகைத்தார்கள்.

இராஜகுமாரன் மாத்திரம் அந்தப் பெரியவர் கூறியதில் ஏதேனு உண்மையிருக்குமென்றுநம்பித்தன் நகரத்திற்குவந்ததும் அவர் கூறியதை நகரத்தில் அநேக இடங்களில் பலகையிலெழுதுவித்தும், கல்லில் வெட்டுவித்தும் யாவரும் தெரிந்து கொள்ளும்படி செய்தான். ஈதல்லாமல் தன் அரண்மனையிலும் முக்கியமான இடங்களில் அவ்வாறே எழுதுவித்தான். தன் வீட்டு வெள்ளி, பொன் முதலியபாத்திரங்களிலும் அதனை வரையும்படி செய்தனன்.

இவ்வாறிருக்கையில் சிலநாளைக் கப்பால் இந்த இராஜ குமாரனைக் கொல்ல எண்ணங் கொண்ட ஒருசதியோசனைக்காரன் அரண்மனை வைத்தியனுக்கு லஞ்சங் கொடுத்து அவனைத் தன் கருத்திற் கிசையும்படி செய்தனன். அரண்மனை வைத்தியன் பணத்தைப் பெற்றுக் கொண்டதும் தன்னை ஆதரித்துவரும் அரசனது நன்றியை யெண்ணாமல்அவனைக் கொல்லத் தீர்மானித்து ஒரு கத்தியின் நுனியில் விஷத்தைத் தடவி அது நன்றாய்க் காய்ந்ததும் சட்டை ஜோபியில் போட்டுக்கொண்டு அரண்மனைக்குப்போனான். அப்போது அவனுக்குஅரச குமாரனோடு தனியேயிருந்து

பேசச் சமயம் வாய்த்தது. அரசனோடு சற்றுப்பேசிக்கொண்டிருந்து அவன்சற்று வேறுபக்கம் பார்த்ததும், வைத்தியன் தன் ஜோபியிலிருந்து கத்தியை யெடுத்து ஓங்கி வெட்டப்போனான். அப்போது அவன் காலில் அங்குக்கிடந்த ஒரு வெள்ளித் தட்டுத் தட்டுப்பட்டது. அதனைக்குனிந்து பார்க்கையில் அதில் "ஒரு காரியத்தைச்செய்யத்தொடங்கு முன் நன்றாய் ஆலோசித்துச் செய், இதனை யென்றும் மறவாதே" என்று வரைந்திருக்கக் கண்டான்; உடனே அவன் தேகம் நடுங்கிற்று. கத்தியும் கையிலிருந்து நழுவிவிட்டது. கத்தி கீழே விழுந்த சத்தங் கேட்டு அரசன் திரும்பிப் பார்த்தான். வைத்தியன் அந்தக்ஷணமே அரசன் காலில் விழுந்து, தான் செய்ததை அவனுக்குச் சொல்லியது மன்றித் தன்னை இச்செய்கைக்குத் தூண்டிய சதியாலோசனைக் காரன் இன்னானென்பதையும் தெரிவித்து "மன்னிக்கவேண்டும், மன்னிக்கவேண்டும்" என்று காலில் விழுந்து கேட்டுக்கொண்டான்.

இராஜ குமாரன் அவனைமன்னித்து, அந்தக் கொடுஞ்செயலுக்கு ஏது வாயிருந்த கொடியவனை மறுநாளே தூக்குப்போடும்படி ஆக்ஞை செய்தான்; பிறகு தன்னோடு அன்று காட்டிற்குவந்த நண்பர்களையழைத்து எல்லோருக்கு முன்னிலையில் "நூறு பவுனுக்கு ஒருஇராஜகுமாரனுடைய உயிரைக் காப்பாற்றிய புத்திமதி கிடைத்தது மிகவும் அருமையல்லவா" என்று கேட்டான். அவர்கள் அன்றுகாட்டில் தாங்கள் ஆலோசனையின்றிச்சிரித்ததை நினைத்து வெட்கமடைந்தார்கள். அரசகுமாரன் எதனால் காப்பாற்றப் பட்டான்? பெரியவராகிய சந்நியாசியின் பேச்சில் உண்மை யுள்ளதென்று நம்பி "மூத்தோர் சொல்வார்த்தை யமிர்தம்" என்ற ஆன்றோர் வாக்கிற் கிணங்க அதனை அலட்சியஞ் செய்யா திருந்தமையா லன்றோ? ஆகையால் என்றும் மூத்தோர்சொல்லை அலட்சியஞ் செய்வது கூடாது மேலும் "கருதாமற்கருமங்கள் முடிக்கவேண்டாம்" என்னும் நீதிவாக்கியத்தையும் மறவா திருக்கவேண்டுமென் றறிக.

தமரன்.

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடஜாபிதா.

(335 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

V. செய்யுள்-பாட்டு.

சிறு குழந்தைகளுக்குப் பாட்டில் சந்தோஷமென்பது யாவருக்கும் அநுபவம். இது குழந்தைகள் அழும்போது தொட்டிலி விட்டுப் பாடும் தாலாட்டைக் கேட்டு அழுகையை நிறுத்தி ஆநந்திப்பதனால் பிரசித்தமாம். சாதாரணமாய் ஆடு மாடுகள் பாம்பு முதலிய ஜந்துக்களுக்கே பாட்டில் பிரிய மிருக்கின்ற தென்றால் பிள்ளைகளுக்குப் பாட்டில் ஆநந்த மிருக்கிற தென்பதில் ஆச்சரிய மென்ன? பாட்டில் ஏன் பிள்ளைகளுக்கு ஆநந்தம் ஜனிக்க வேண்டு மென்பதைச் சற்று ஆராய்வாம். பாட்டின் உதாத்த (உயர்ந்த) அநுதாத்த (தாழ்ந்த) ஸ்வரங்களை (ஒலியை)ப் பிள்ளைகள் தங்கள் செவி யிந்திரியத்தால் கேட்கிற போது அவர்களின் மனமானது பாட்டின் ஸ்வர பரிணாமத்தை (மாறுதலையை) யடைகின்றது. பாட்டின் ஸ்வரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஸூக்ஷ்மமா யிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு மனதிற்கு ஆநந்தம் அதிகரிக்கும்; மனது ஸூக்ஷ்ம ஸ்வரபரிணாம மடைகின்றது; இது வேயுமன்றிப் பாட்டில் ஒரே அளவாகத்தாளம் நடைபெறுமாயின், அவ்விசையைக் கேட்பதில் ஆனந்தம் உண்டாகின்றது.

இவ்வனம் பிள்ளைகளுக்குச்சந்தோஷ முண்டாக்கத்தக்க பாட்டுகளை யவர்களுக்குக் கற்பித்த லத்தியாவசியகமானதாகவே,பாடஜாபிதாவில் இதனையும் ஒரு கட்டாய விஷயமாக அங்கீகரித்திருக்கின்றனர்.

செய்யுள் ரூபமாக விருப்பதால் அதிலுள்ள விஷயங்களை யவர்களுக்குத் தெளிவாய் விளக்க அதனைக் கண்ட பாடம் செய்விக்கலாம். பிள்ளைகள் செய்யுளைச் சீக்கிரத்தில் மறக்க மாட்டார்கள். ஆகலால்தான் நன்னெறி மூதுரை முதலிய பல நீதி நூல்கள் செய்யுள் ரூபமாக ஆக்கப்பட் டிருக்கின்றன.

பாலர் வகுப்பிற்குச் சாதாரணமாய்ச் செய்யுள்களும் நீதிவாக்கியங்களும் கற்பிக்கத்தக்கவை யல்ல; ஆனல், விளையாட்டுகளோடு

கூடிய பாட்டுகளும் கதைகளுக்குச் சம்பந்தப்பட்ட பாட்டுகளும் கற்பிக்கலாம்.

VI. சரீர அப்பியாசம்.

சரீரத்திற்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நல்ல சுகத்தோடு கூடிய சரீரத்திலுள்ள மனம் எவ்விஷயங்களையும் கிரகிக்கத் தக்க வலிமேவாடு கூடியிருக்கின்றது. ஆகலால், மனோசக்தியை அபேக்ஷிக்கிறவர்கள் தேகாரோக்கியத்தைப் பற்றிக் கவனித்தல் அத்தியாவசியகமாம். சிறுகுழந்தைகளுக்குத் தேகம் நன்றாய்ப் பருத்து வலி வுடையதா யிராமையால அவர்களின் மனதும் கடினமான விஷயங்களை யாலோசிக்கவும் ஓரே விஷயத்தை அதிக நேரம்போசிக்கவும் சக்தியுடையதன்று. ஸ்தூல தேகமானது விருத்தியடைய விருத்தியடையச் சூக்ஷ்மதேகமான மனதும் விருத்தியடையும். ஆதலால் சிறு பிள்ளைகளுக்கு மனோ சக்தியை விருத்தி செய்வான் வேண்டிச்சரீர அப்பியாசம் அத்தியாவசியகமாமென்பது பெறப்படுகின்றது. சரீர அப்பியாசங்கள் மிகச் சிறிய குழந்தைகளுக்கு அதிகமாயும் வயது வர வரக் குறைவாயுமிருக்கலாம். சாதாரணமாய்ப் பாலர் வகுப்பிற்குக் கற்பிக்கத்தக்க சரீர அப்பியாசங்களாவன:—

1. ஓடுதல்
2. குதித்தல்
3. வட்டமாய் ஓடுதல்
4. விதை பொறுக்கல்
5. கட்டுக்கண்ணும்பூச்சி
6. பிள்ளைபார்பந்து
7. முட்டைக்காண்டி யாட்டம் முதலியன.

இவையேயு மன்றிக் கவாத்தும் கற்பிக்கலாம். அவையாவன:—

1. வலம் இடம் திருப்புதல்
2. நேராக நடத்தல்
3. கை, கால், கழுத்து, தலை, மார்பு, இடுப்பு, முழங்கால் முதலிய அவயவங்களுக்கு அப்பியாசங்கொடுக்கத்தக்க வேலைகள்.

(வரும்.)

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுவரன் பேட்டை.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி).

சேதாம்பலை நிகர்த்த வாயும், செங்குவளையை நிகர்த்த கண்ணும், வெண்ணிலாவைப் போன்ற சுடரொளியும், வெள்ளி மலையை நிகர்த்த புயங்களும், வாசனை நிரம்பப்பெற்ற புஷ்பம் பொதிந்து முடிக்கப்பட்ட குடுமியும், வயிரத்தினைக் குண்டலம் அணிந்த காதும், பாலசூரியன்போன்ற அழகிய முகத்தின் பிரகாசமும் பொருந்தியவனப்புக்களமைந்த ஜமீன்தாராகியவீரசிங்கமுதலியாரது கடிமனைக் கிழத்தியை மங்கலப்பெண்கள் அட்டமங்கலமேந்தி வந்து உபசரிக்கக் குதிரைவண்டியினின்றும் இறக்கிச் சுந்தரப்பொடியும் பூவும் சுரும்பொடுதுதைந்து விசிச்சந்திரன்தவழ மாட மாளிகைக்குள் கொண்டு சென்றார். வதூவரர்களை அழைத்துச்சென்றுபசரிக்க வந்த பிரபுக்களும் சீமாட்டிகளும் சந்தன தாம்பூலாதிகள் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். பின் பூங்காவனம் ஓர் அறைக்குட் சென்று தனது உடையை மாற்றினாள். அதற்கு இரண்டுபணிப் பெண்கள் அவளுக்குதவி செய்தார்கள். அச்சமயம் அவர்களிருவரும் பக்கத்தே நிற்றலால் அந்தரங்கமாய் உள்ளத்தடக்கிய கவலைகளை வெளிக்குக் காட்டாது விட்டனள். சிறிதுநேரஞ் சென்றபின் மேற்குறித்த இரண்டு பணிப்பெண்கள் அவளைக் "கழுமியகாகதுண்டங் கமழ்தொறுவ் காளமேகங், குழுமிய தனையமாடத்"துட் புகுத்த முன்னரே நாயகியின் வரவை எதிர்பார்த்திருந்த ஜமீன்தார் அவளை ஓர் ஆசனத்திருத்தித் தாமும் ஓர் ஆசனத்தமர்ந்தார். அது "விழுமலர்ப் பிணையன் னாளும் விடலையும் மேருநெற்றிச், செழுமணிச் சிலைசென்றேறும் தெய்வமா மிதுனம்" போலாகியது. நாணமென்னும் பாசத்தாற் பீடிக்கப்பட்டுப் பேரானந்தத்துடனே பார்த்தும் பெருவரை அகலஞ்சேர்த்தி இனியவார்த்தையாகிய அமிர்தத்தைப் பருக விரும்பி என்னாருயிரே! என்கொலிம் மிகை நாணென்று கூறிக் குதூகலித்து,

"பருவத்தா லரும்பிப் போதாய்ப் பையவே யலர்ந்து முற்றி
மருவித்தேன் கனிகொண் டுள்ளான் மனங்கொள வழிந்த காமத்
திருவொத்தகளியின் றீஞ்சா றாரவுண் டார மாட்டா
ருருவத்தா லிருவ ராகி யுள்ளத்தா லொருவ ராகி,"

கலந்து பேரின்பத்தை யனுபவித்தார்கள். மற்றைநாள் பூங்காவனத்துக்கு அந்தமாளிகையின் அதிகப்பற்றான இடங்களையும் அவைகளிலுள்ள விசேஷங்களையும் நாயகர் காட்டப்பார்த்து வரும்பொழுது காத்திராப் பிரகாரம் தான் அளவற்ற திரவியங்களை அனுபவிக்கும் பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டதைப் பற்றித் தன்னுள் வியந்துகொண்டாள். சிலவாரஞ் சென்றுவிட்டன.

ஒருநாட் பிற்பகல் ஜமீன்தார் தமது ஆலோசனை அறையில் இருந்து ஜமீன்விஷயமாக ஆலோசித்துக் கொண்டிருக்கப் பூங்காவனம் தனதுகூந்தலைமெல்விரலாற்றிருத்தியதை மிருதுவாகியகையிற்றாங்கித் தன்னுடன் நிற்கும் கருமேகக்குழன் மடவார்கை சேர்ந்து நிற்பப் பந்தாடிப் பொழுதுபோக்கித் திரும்பித் தனது அறையில் இருக்கும்பொழுது காதலர் அளவுகடந்த சந்தோஷத்துடனே அங்குவந்து பிராணநாயகி! எனது இம்மாளிகையில் அன்று நீபார்த்ததுபோகப் பாராத இன்னொரு பகுதியில் வெகுவிசித்திரமான அலங்காரம் பொருந்திய ஓர் அறையை இப்பொழுது உனக்குக் காட்டப்போகின்றேன். அதில்காலஞ்சென்று போன எனது முன்னோர்களதும் பின்னோர்களதும் பிரதிமைப் படங்களும் இன்னும் இவைகளேயன்றிச் சித்திரசிரேஷ்டர்களாற் சித்திரிக்கப்பட்ட படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. உனக்கு அவைகளைக் காட்டுதற்காகப் பணியாளர்களைக்கொண்டு குறித்த அறையைத் துப்புரவாக்கி வைத்திருக்கின்றேன். ஆகையால் அங்குப் போவோம்வருவாய் என்று அழைத்துக்கொண்டு போனார். அங்கு அவரின் முற்குடும்பத்தினோருடைய படங்கள் யாதொரு வித்தியாசமு மில்லாமல் தத்ரூபமாகக் காணப்பட்டன. அவைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு பிந்தி இறந்தவர்களது படங்களுக்கு முன்னிலையில் வந்து அவைகளைப் பார்த்தபோது பூங்காவனத்துக்குப்பழைய எண்ணங்கள் ஞாபகத்துக்கு வந்தன. கடைசியாயிருந்த படத்துக்குச் சமீபத்தில் வந்தவுடன் ஜமீன்தார் கண்ணே! இதோ தோன்றும் அழகியவாலிபன் காலஞ் சென்று போன எனது சகோதரனின் குமாரனாவான். எனது அன்பும் பட்சமும் உரிமையும் இவனிடமே தங்கியிருந்தன. இவனைப்பற்றி அதிகம் சொன்னால் நமது சந்தோஷத்துக்கு இடையூறாய்விடும்;

அஃதாவது இதற்கு இரண்டுவருஷத்துக்கு முன் நான் ஜமீன்பட்டத்துக்கு உரித்தானவனாகவந்தபோது எனது தம்பியும் இச்சிறுவனின் தந்தையும்இதோகடைசிக்கு இரண்டாவதாகத்தோன்றும் படத்தில் அமைந்திருப்பவருமே எனக்குப் பின் ஜமீன்பட்டத்துக்கு வரவேண்டிய "மைனராக" விருந்தவர். அவர் காத்திராவாறு துறக்கநாடு சென்றுவிட்டனர். அவரின் இரண்டாவது குமாரனும் அருட்பிரகாசம் என்னும் பெயருடையவனும்இச்சித்திரத்திலமைந்திருப்பவனுமாகிய இவன் கோலாலம்பூரில் கண்ணியமான உத்தியோகத்திலிருக்கும் பொழுது ஆற்றுக்கிரையாகிமாண்டு போயினன் என்று கூறும் பொழுது பூங்காவனத்துக்கு அப்படத்தைப் பார்த்தவுடன் துக்கம் நிரம்பி ஒருவிதமானநடுக்கமும் மனச்சோர்வும் மயக்கமுமுண்டாக, அவர் குறித்தபடங்கள் கெட்டுப் போகாதபடி பூசிவைக்கப்பட்ட தைலங்களின் துர்வாசனையே இதற்குக் காரணமென்று திடுக்கிட்டு அவளை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச்சென்று குறித்த அறையிலிருக்கும் கெட்டவாசனைகளை அகற்றிவிடும்படி பணியாளருக்குக் கட்டளையிட்டார். சிலமணிநேரஞ் சென்றபின் பூங்காவனம் நாயகரைப் பார்த்து ஐயா! சித்திரசாலையினுண்டான துர்வாசனையால் வந்த மயக்கம் தற்போது பூரணசுகமாயிற்று; ஆயினும், நான்சிறிதுநேரம் தனிமையில் வசிக்க விரும்புகின்றேன் என்று உத்தரவுபெற்றுக் கொண்டு தன்னுடைய அறையிற்போய்ச் சித்திரச்சாலையிற் கண்ட அதிசயக் காட்சியையும் நாயகர் கூறிய குடும்ப சரித்திரத்தையும் பற்றிச் சிறிதுநேரம் ஆலோசித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் அவளுக்குக் கண் திறக்கப்பட்டது. தந்தையாரும் மாமியாரும் இக்குவரும் பொழுது சொல்லிவிட்ட வார்த்தைகள் விளங்கவே, இஃதென்ன ஆச்சரியம்! முன்னர் என்னால் விரும்பப்பட்ட அருட்பிரகாசத்தின் குடும்பத்தில் அதிலும் அவரின் பெரிய தந்தையாரையே விவாகம் முடித்திருக்கின்றேன். அந்தக் காரியங்களொன்றும் ஜமீன்தாராகியஎனது நாயகருக்குத் தெரியமாட்டாது. எனது தந்தையார் என்னை அருட்பிரகாசத்தின் குடும்பத்திலேயே சேர்த்துவைக்கவேண்டுமென்று காரியத்தை முடித்துவிட்டார்; அவர்மீது குற்றங்கூற இடமில்லை; தன்னிடையே வந்து முடிந்ததை ஏற்றுக் கொள்ளல் வேண்டுமென்று தன்னுட் கூறிக் கொண்டிருந்தாள்.

சிவராமலிங்கம் பிள்ளை.

ஜப்பான்.

(முன்தொடர்ச்சி).

ஜப்பான் தேசத்துச் சிறுவர்களைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். ஜப்பான் தேயத்தில் மற்றத்தேயங்களை விடச் சிறுவர்கள் நன்றாய் வளர்க்கப் படுகிறார்கள். பிள்ளைகள் தாய் தந்தைகளிடத்தில் பயபக்தியோடு நடப்பார்கள். பெற்றோர்களும் பிள்ளைகளிடத்தில் அன்பு பாராட்டுவார்கள். இப்படிச்சொல்வது அதிகமாகத் தோன்றினும் இவை யெல்லாம் வாஸ்தவமே. வயது முதிர்ந்த பெரியோர்களிடம்போல அத்தேயத்துப்பிள்ளைகளிடத்தில் அமரிக்கை சாந்தம் முதலிய குணங்கள் பொருந்தி இருக்கின்றன. சிறுவர்களுக்கு வருத்தம் நேரிட்டால் பார்ப்பவர்கள் அருவருக்கும்படி விகாரமான முகத்துடன் அழக்கூடாது; அதிக சந்தோஷமாயிருக்கும்பொழுது பலமாய் சிரிக்கவும் கூடாது. இவ்விதச் சிக்ஷை இருப்பதால் தான் சிறுவர்கள் நற்குண முள்ளவர்களா யிருக்கின்றார்கள்.

சிறியவர்களா யிருக்கும் பொழுது பெண்பிள்ளைகள் குதூகலத்துடன் விளையாடுவார்கள். பட்டணங்களிலும் கிராமங்களிலும் வீதிதான் விளையாடுமிடம். பந்துவிளையாடுதல் காற்றாடிவிடுதல் இவைபோன்ற விளையாட்டுக்களை வீதியில்விளையாடுவார்கள். ஜப்பான்தேயத்தில் குழந்தைகளைக் கையில் எடுத்துப் போவதில்லை. தோளிலிருந்து ஒரு துணியைக் கட்டி அதில் குழந்தையைப் போடுவார்கள். ஆகையால் விளையாடும் பெண்பிள்ளைகளில் ஒவ்வொருவரும் தோளில் குழந்தையைக் கட்டிக்கொண்டு விளையாடுவார்கள். பெண் பிள்ளைகள் விளையாடும்போதும் ஓடும்போதும் தோளிலிருந்து தொங்கும் குழந்தைகள் ஆடுவதைப் பார்க்க நாம் சந்தோஷத்தையும் அச்சத்தையும் கொள்வோம். ஆனால், குழந்தை சிறிதுமழாமல் விளையாட்டைப் பார்த்து ஆனந்திக்கும் அல்லது தூங்கிவிடும்.

பெண்களும் பிள்ளைகளும்ஒரேமாதிரியான உடையைத்தான் உடுக்கிறார்கள். மேலும், சிறுவர்களுக்கென்று தனி உடையில்லை. அத்தேயத்து முக்கிய அங்கிக்கு கிமோனு என்றுபெயர். கிமோனு

என்பது இத்தேயத்துக்கவுனைப்போன்றது. கவுனுக்குள் இன்னொருகிமோனு போட்டுக் கொள்வார்கள். அங்கியை ஒபி (Obi) என்று பெயரை வகிக்கும் அரைக் கச்சால் கட்டுவார்கள். பெற்றோர்கள் பணக்காரர்களாயிருந்தால் அரைக்கச்சு பட்டு அரைக்கச்சா யிருக்கும். ஜப்பான் தேயத்துப்பெண்கள் அரைக்கச்சை ஒரு பெருமையாகக் கொண்டாடுவார்கள். பெண்கள் தங்கள் தலைகளை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்வார்கள்; பிள்ளைகளின் ஒபி பெண்களின் ஒபியைப் போலச் சிறந்ததல்ல. சிறுவர்கள் மஞ்சள் உடுப்பையும் பெண்கள் சிவப்பு நிறமான உடுப்பையும் தரித்துக் கொள்வார்கள்.

ஐந்தாவது வயதில் சிறுவன் அகாமா என்னும் சல்லடத்தை உடுத்திக்கொண்டு பெருமை அடைகிறான். அந்த வயதில் பையன் கோயிலுக்குப் போய்த் தன்னை அதுவரையிலும் இரக்ஷித்த கடவுளுக்கு வந்தனம் செய்கிறான். போகும்போது புது அகாமா தகதகவென்று வெயிலில் பிரகாசிப்பதையும் அஃதொரு விதமான சப்தம் செய்வதையும் கண்டு ஆநந்திப்பான். அப்பொழுது கால்களில் டாபிஎன்பதைப்போட்டுக்கொள்கிறான். டாபி வீட்டுக்குள் செருப்பாகவும் வெளியில் போகும் போது ஸ்டாகிங்ஸ் ஆகவும் உபயோகப்படுகிறது, சிறுவன் வெளியில் போகும்போது மிதியடிக் கட்டையை உபயோகப்படுத்துகிறான். வீட்டுக்குள் வந்ததும் மிதியடிக்கட்டையை எறிந்துவிட்டு டாபியுடன் உள்ளே செல்லுகிறான். ஜப்பானியர்களின் உடுப்புகளில் பைகள் கிடையா; வேண்டிய சிறு சாமான்களை அரைக்கச்சையில் வைத்துக் கொள்வார்கள்.

தனவந்தர்கள் தாம் கிமோனுவையும் ஒபியையும் உபயோகப் படுத்துவார்கள். எளியவர்கள் அதிசாதாரணமான உடையை உடுப்பார்கள். கூலிகள் கோடைக்காலத்தில் சல்லடத்தைத் தவிர வேறொன்றும் உடுக்கிறதில்லை. ஆனால் போலீஸ் சேவகனைக்கண்டுவிட்டால் கையில் தயாராயிருக்கும்பஞ்சினால் செய்யப்பட்டசிவப்பு சொக்கா யொன்றைப் போட்டுக் கொள்வார்கள்.

(வரும்).

R. Sankaran.

ஹித மொழிகள்.

1 கடவுள் இல்லை என்று ஒருவன்சொன்னால் உடனே அவனது தவடைமீது நல்ல அடி ஒன்று கொடுக்கவும். அதற்கு அவன் "நோகிறது" என்றுசொன்னால், மறுபடியும் இன்னொரு அடி கொடுத்து "எதோ! உன்நோயை நான் காணவில்லையே, ஏன் போய் சொல்லுகிறாய்" என்று கூறிப் பின்னும் அவனை நோக்கி உன்நோயை நான் எங்ஙனம் காணவில்லையோ அங்ஙனமே கடவுளை நாம் காணமுடியாது. எப்படிக் காரணமின்றி ஒரு காரியம் நடவாதோ அப்படியே கடவுள் ஒருவரில்லாமல் இவ்வுலகமும், இதிலுள்ள பலவித சிருஷ்டிகளும் நடைபெறா. மேலும், இராக்காலங்களில் நாம் நக்ஷத்திரங்களைக் காண்கிறோம்; ஆனால் பகலில் அவை நம்கண்களுக்குப் புலப்படுவதில்லை. அதைக் கொண்டே பகலில் நக்ஷத்திரங்கள் இல்லை என்று நாம் கூறலாமோ? ஆதலால் அஞ்ஞானம் நிறைந்த நம்மால் கடவுளைக் காணாமலிருப்பதனாலேயே கடவுள் இல்லையென்று கூறலாகுமோ? என்று போதிக்கவும்.

2. நாம் தண்ணீரை "ஜலம்" என்றும், "பாணி" என்றும், "வாட்டர்"என்றும், "நீர்" என்றும்,"ஆக்வா" என்றும் இன்னும் பலவிதமாகவும் வழங்குகின்றனம். ஆனால் வஸ்து ஒன்றுதானே. குயவன் மண்ணைக் கொண்டு சட்டி, பானை, குடம், செம்பு, கிண்ணம் முதலிய பல உருவங்களைச் செய்கின்றான்.ஆனால் மூலம் மண்தானே. அதுபோல இவ்வுலகில் விஷ்ணு, சிவன், புத்தன், கிறிஸ்து,மகமத் முதலிய பல தெய்வங்களை ஜனங்கள் வழிபட்டாலும்,பெயர் மாத்திரம் பேதமேதவிரக் கடவுள் ஒருவர்தான். அவரை எவ்விதமாவது பூஜிக்கலாம். ஆகவே மதங்களில் சிறந்தவை தாழ்ந்தவை என்பன கிடையா. எல்லாம் சமமே. ஆதலால் நாம் மதச்சண்டையை விலக்குவோமாக.

3. நெருப்பின்றிப் புகை எங்ஙனம் உண்டாகாதோ அங்ஙனமே கடவுளின்றி மனிதன் பிழைபான். ஆனால் "அவர் எங்கே இருக்கிறார்? அவரை எங்ஙனம் அடைவது?" என்று நாம் நினைக்கலாம். அதற்கு, எப்படி சமுத்திரத்தினடியிலிருக்கும், முத்து

பவளங்களை மனிதர் மூழ்கிக் கஷ்டப்பட்டு எடுக்கிறார்களோ, அப்படியே கடவுளையடைய நாம் "ஞானம்" என்கிற ஆயுதத்தைக் கொண்டு கஷ்டப்பட்டுக் கண்டு பிடிக்கவேண்டும்.

4. காற்றின் ரூபத்தை நாம் காணமுடியாது. ஆனல் அது வீசும்போது அதை யுணருகின்ரேம். அக்கினிக்கும் நிலையான உருவம் கிடையாது. ஆனல் அது தகதகென எரியும் பொழுது மாத்திரம் நாம் விவரிப்பதற்கரிய ஒரு ரூபத்தை ஏற்றுக்கொள்கிறது; அங்ஙனமே அரூபியான கடவுள் வேண்டுமானபோது ஓர் உருவத்தை ஏற்றுக் கொள்ளுகின்றார். இதைத்தான் நாம் "அவதாரம்" என்கின்ரேம்.

5. கடவுளையும், அவருடைய வேதத்தையும், அவருடைய பக்தர்களையும் நாம் சமமாகக் கருதவேண்டும். இதை நாம் "பகவத் பக்தி," "பாகவத பக்தி" என்கின்ரேம். பகவத் பக்தி என்பது கடவுளைப் பேணுதல். பாகவத பக்தி என்பது பகவானின் பக்தர்களின் பக்கல் பக்திவைத்தல்; பாகவத பக்திக்குப் பலன் அதிகம் என்பர் மேலோர்.

6. கடவுளைத் தாய்க்கு ஒப்பிடலாம். ஒரு புத்திரன் தகப்பனை விடத் தன் தாயினிடந்தான் ஸ்வதந்தர முள்ளவனும் அன்புள்ளவனுயு மிருக்கிறன். அதைப்போலவே தாயும் மற்றவரை விடத் தன் மகனிடம் அதிக அன்புவைக்கிறள். அங்ஙனமே கடவுளும் தாயைப்போல் நம்மிடம் அதிகமான அன்பை வைத்து நம்மை முற்றிலும் ஈடேற்றிவைக்க மிகக்கவலைப் படுகிறர்.

(இன்னும் வரும்)

எம்-எஸ்-ஸ்ரீ நிவாஸசர்மா, வேலூர்.

மலேரியா என்னும் விஷசுரம்.

சிலகாலத்திற்குமுன் இச்சென்னை மாநகரில் குடிபுகுந்த விஷசுரமானது இப்பொழுது ஊர்முழுவதும் பரவிச் சனங்களை இம்சைப்படுத்துவதும் அவர்களுக்குச் சுரக்கட்டியையுண்டாக்குவதுமாக விருக்கின்றது. இதனல்சனங்கள் படும்கஷ்டம் சொல்லி முடியாததாம். ஆனல்இதற்காக நமதுகவர்ன்மெண்டார் பெரும் பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் இது வரையில் கொய்னுவென்னும் மருந்து இல்லாவிட்டால் சனங்கள்

அநேகமாய் மரணமடைந்திருப்பார்களென்றும், மேற்படி சுரத்திற்குக் கொய்னாவைத்தவிர வேறு மருந்துகிடையாதென்றும், சொல்லுகின்றார்கள். அதுவாஸ்தவமே. ஆயினும், கொய்னாவைவிட அதிசீக்கிரமாகமேற்படி சுரத்தைக் கண்டிக்கக் கூடிய மருந்துகளும் பலவுள. தபாலாபீசுக்களில் கொய்னாவிற்பது வியாபாரத்திற்காகவா அல்லது ஏழைச்சனங்களின் நன்மைக்காகவா என்று யோசிக்குமிடத்து, அது ஏழைச்சனங்களின் நன்மைக்காகவென்று தோன்றவில்லை. ஏழைகளின் நன்மைக்காகவெனின் அதன் விலை சரசமாயிருத்தல் வேண்டும்; அல்லது அதனை இனாமாய்க் கொடுத்தல் வேண்டும். கடைவீதியில் கொய்னா அவுன்சு 9 அணாவாக விற்கப்படுகின்றது. அதில் 480 கிரெயின் இருக்கின்றன. இவற்றைப்போஸ்டாபீசார் ஐந்துஐந்து கிரெயினாகப் பொட்டணம் கட்டி 3பைக்கு விற்கின்றனர். 480 கிரெயினில் 96 பொட்டணம் செய்யப்படுகின்றன. இவற்றை விற்றால் $1\frac{1}{2}$ ரூபாயாகின்றன. தபாலாபீஸில் 9 அணா கொய்னா நமக்கு $1\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இஃதொரு நல்ல வியாபாரமாம். இதுநிற்க,

கொய்னா வென்பது சுரப்பட்டையைத்தவிர வேறன்று. இங்கிலீஷில் இதுசின்கோனாபார்க் எனப்படுகின்றது. கொய்னாவென்பது நமதுமுன்னோர்கள் ஆண்டுவந்த சுரப்பட்டையேயாம். இவர்கள் அதன்சத்தை எடுத்து உபயோகிக்கிறார்கள். இஃதொழிய மருந்தில் வித்தியாசமின்று. இங்கிலீஷ் வைத்தியர்கள் சுரப்பட்டை ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொண்டார்களேயொழிய மற்ற மருந்துகளைப் பார்த்தவர்களுமன்று; கேட்டவர்களு மன்று. ஆதலால் தான் சுரத்திற்குக் கொய்னாவைத்தவிர வேறு மருந்துகிடையாது என்றுசொல்லத்துணிந்தனர். சுரப்பட்டையைக் காட்டிலும் அதிசீக்கிரத்தில் வியாதியைச் சொஸ்தப்படுத்தும் ஒளஷதங்களுள்சிறந்தவை காப்வெப் என்னும் ஒட்டடை, தும்பைவேர், படிகாரம், அவுரியின்வேர், வேம்பு என்பனவாம். இவைகளின்முன் கொய்னா பயனற்றதாம்; ஏனென்றால், விஷசுர முண்டானவர்களுக்குக் கொய்னா கொடுப்பதைவிட அடியில் வரும்கஷாயத்தைக் கொடுத்தால் ஒரேதடவையில் சுரம் நின்றுவிடும்.

வராகனெடை.

லவங்கப்பட்டை	2		
சுரப்பட்டை	2	விரைத்திராட்சி	3
நிலவேப்பு	1	காசினிவிரை	3
வெள்ளரிவிரை	3	தும்பைவேர்	1

இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து $1\frac{1}{2}$-ஆழாக்குச் சலம்விட்டு $\frac{3}{4}$ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடித்துநாள்ஒன்றிற்கு3வேளை வேளைக்கு ஒரு அவுன்சுவிகிதம் சாப்பிடவேண்டும். இப்படி இரண்டுமூன்றுநாள் சாப்பிட்டால், முதல்நாளிலேயே சுரம் நின்றுவிடும். ஆனால் கஷாயம் ஒவ்வொருநாளும் முன்சொல்லியிருக்கும் அளவுப்படி புதிதாயிருக்கவேண்டும். சுமார் இரண்டுமாதங்களுக்குமுன் ஆர், சடகோபாசாரி பி. ஏ., பி. எல். ஐகோர்ட்டு வக்கீல் அவர்களின் இளையமாப்பிள்ளைக்குச் சதாசுரம்வந்து கொண்டேயிருந்தது, அதற்குக்கொய்னாவை இன்ஜெக்ட் செய்து கொண்டுவந்தும் சுரம்நிற்காமலேபோயிற்று. வயிற்றில் கட்டிவிழுந்துவிட்டது. கடைசியாய் அவருக்கு கீழ்க்குறிக்கும் கஷாயம் 15-நாள் சாப்பிடக் கொடுக்கப்பட்டது. அதனால் பருத்திருந்த கட்டிபோனவிடம் தெரியாமலே போயிற்று. சாதாரணமாய் அதற்குக் கொய்னா சாப்பிட்டால் 6 மாதம் சாப்பிடவேண்டும். இவைகளால் நான் கொய்னாவைத் தூஷிக்க வந்தேனென்று நினைத்தல் கூடாது. எனக்கும் கொய்னாபட்டை அல்லது சுரப்பட்டை உடன்பாடுதான்.

வராகனெடை.

1 சுரப்பட்டை	3	4 லவங்கம்	2
2 நிலவேப்பு	2	5 விரைத்திராட்சி	3
3 லவங்கப்பட்டை	3	6 அன்னபேதி 2 குண்டுமணி.	

கஷாயம் முன்சொன்னது போலவாம்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

வர்த்தமானம்.

தான்பெற்ற பிள்ளையைக்கொன்று தீபாந்தர சிட்சையடைந்தவள்.

திருவெண்ணெய் நல்லூரில் சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஒருவிதவை வியபிசாரஞ் செய்து பெற்றபிள்ளையைப் பெற்றவுடனே, கொன்று, அங்குள்ள ஒருதாழம் புதரில் எறிந்துவிட்டாள்; அந்தச்செஷன்ஸ் கோர்ட்டில் ஆயுள்பரியந்தம் தீபாந்தர சிட்சை விதிக்கப் பட்டனள்.

ஒரு பரோபகார நன்கொடை.

ஐதராபாத்சமஸ்தானத்து நைஜாமவர்கள் பாலிடானா ஸமஸ்தானத்து வெள்ளக்கஷ்ட நிவர்த்திக்கு 2000 ரூபாய் தந்திருக்கின்றார்.

ஒரு தீவிபத்துக் கேஸ்.

நாமக்கல்லுக்கு 7-மைல் தூரத்திலுள்ள சேந்தமங்கலம் சப்ரிஜிட்டிரார் ஆபீஸில் சென்ற செப்டம்பர்மாதம் 1-ந் தேதி யிரவுசுமார் 9-மணிக்கு யாரோ தீ வைத்துவிட்டனர். அதுபற்றிப் போலீசார் அங்குள்ள இருவர் மீது சந்தேகங்கொண்டு, அவருள் ஒருவரைப் பிடித்து ஜெயிலில் வைத்திருக்கின்றனர்; மற்றவர் அகப்படவில்லை.

வங்காளத்திலொரு கொள்ளை.

சென்றமாதம் 29-ந்தேதி இரவு வங்காளத்தைச்சேர்ந்த ஹௌரா ஜில்லாவிலுள்ள ஹார்ஸ்கஞ்ச் என்னும் கிராமத்தில் வசிக்கும் உபேந்திரநாத் தேவ் என்பவரது வீட்டில் 12 கொள்ளைக்காரர்கள் ஆயுதபாணிகளாய்ப்பிரவேசித்து, 2000 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையபகரித்துப்போயினர்.

மோட்டார் வண்டியால் நேர்ந்த ஒரு கொலை.

சென்ற மாதம் 30-ந்தேதி கல்கத்தாவில் பல்வைத்தியஞ் செய்வதில் பெரும்பேர் பெற்றுள்ள மிஸ்டர் நாவிஸ் என்பவர் மோட்டார் வண்டி ஏறிச்செல்லும்போது, அவ்வண்டி ஓர் இந்துவின் மீதேறிவிட்டது; அதனாலவன் இறந்துபோனான்.

பிரயாண மோட்டார்வண்டி.

நாகர்கோவிலுக்கும் திருவனந்தபுரத்திற்கும் இப்போது பிரயாண மோடார்வண்டிகள் விடப்பட்டு வருகின்றன.

ஒரு படுகொலை.

திருப்பூரி விருந்தகொழிஞ்சிவாடிக் கிராமத்திற்கு வந்த ஓர் அம்பட்டன் அமராவதிக்கருகேயுள்ள பழனிக்குப் போகும் ரோட்டில் சென்ற மாதம் 26-ந்தேதி பகல்சுமார் 2 மணிக்குச் சிலரால் படுகொலை செய்யப்பட்டான். கொலை செய்தவர்கள் அகப்படவில்லை.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வெடிகுண்டால் கொல்லப்பட்டார்.

சென்றமாதம் 30-ந்தேதி மைமன்ஸிங்கில் போலீஸ் இன்ஸ்பெக்டராயிருக்கும் பங்கிம் சந்திரசௌத்திரியினது வீட்டில் ஒருவெடிகுண்டுபோடப்பட்டது. அதனா லவரிறந்துபோனார். வெடிகுண்டு போட்டவரின்னாரென்று தெரியவில்லை. அதுபற்றிப் போலீஸார் அநேக வீடுகளைச் சந்தேகத்தின்மீது சோதனை செய்து வருகின்றனர்.

ஒரு பழக்கடைக்காரனுக்கும் சார்ஜண்டிற்கும் நேர்ந்த சண்டை.

கல்கத்தாவில் ஹாரிஸன் ரோட்டிற்கும் கிளைவ்வீதிக்கும் நடுவேயுள்ள ஒருஜங்ஷனில் ஒரு டிராம்வண்டி ஸோரெட்டாடொ கன்னிகாமடத்தைச் சேர்ந்த மெம்பர்களேறுவதற்காக நிறுத்தப்பட்டிருந்தது. அதில் ஒருபழக்கடைக்காரன் வந்தேறினான். அவனைப் போலீஸ் சார்ஜெண்ட் பர்ட் என்பவர் தடுத்தனர். அதுகாரணமாகக் கலகமுண்டாக, அவனைப் பழம் விற்போர் பலர் ஒன்றுகூடி முகத்திலும் கையிலும் காயமுண்டாக அடித்து

விட்டனர். அப்பொழுது நேர்ந்த குழப்பத்தால் வண்டியேறவந்து கலகஞ் செய்த பழக்கடைக்காரன் மறைந்துபோய்விட்டான். அவர்களுள் ஆறுபேர் பிடிக்கப்பட்டு விசாரணையி லிருக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்துக்களுடைய தீர்மானம்.

தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்துக்களுள் 500 பேர் செப்டம்பர் மாதம் 28-ந்தேதி ஜோஹான்ஸ் பர்க்கில் ஒருபொதுக்கூட்டங்கூடி, தென்னாபிரிக்காக் கவர்ன்மெண்டார் தாம் கேட்பதைக் கொடுக்காவிடின், எதிர்க்காது எதிர்க்கும் சாதனத்தை மேற்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தனர்; ஏகாதிபத்திய கவர்ன்மெண்டாரின் உதவியை வேண்டிக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தனர். மிஸ்டர் காந்தி அந்தக்கூடத்தில்ஜோஹானீஸ் பர்க்கில் வசிக்கும் இந்து ஸ்திரீகள் இப்போது சிறைச்சாலையில் கைதிகளாயிருந்து வரும் தமது சகோதரிகள் படுங் கஷ்டங்களைத் தாமும் படுவதாகத் தீர்மானித்திருக்கின்றனரென்று தெரிவித்தனர்.

தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்துக்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப்போவது கூடாதென்று அங்குச் சட்டமேற்படுத்தப்பட்டிருக்கின்றது; அங்குள்ள இந்துக்கள் அந்தச் சட்டத்திற்கு மீறிநடக்கத்தீர்மானித்திருக்கின்றனர்; அதனால் வரும் தீங்குகளையனுபவிக்கவேண்டுமென்று துணிவாயிருக்கின்றனர். டிரான்ஸ் வாலிலிருக்கும் இந்துக்கள் அவ்விடத்திலிருந்து வேறிடத்திற்கு வருவதுபற்றித் துணிந்திருக்கின்றனர். அதுபற்றி 16 பேர் கைதிக ளாக்கப்பட்டு ஜெயிலில் பொறுக்கமுடியாத வருத்தத்தை யனுபவித்து வருகின்றனர். அவர்களுள் இருவர் சட்டப்படி அம்மைகுத்திக்கொள்வதை மறுத்து, இரண்டு நாள் பட்டினியாக விருந்தனர்; இவ்வாறு மற்ற இந்துக்களும் செய்தல் கூடுமென்று கருதி, தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் அவ்விருவரையும் நேட்டாலிலுள்ள டர்பன் ஜெயிலுக்கனுப்பி விட்டனர்.

நான்கு இந்தியர்கள் லைசென்சின்றி வீடுவீடாகச் சென்று சாமான்களை விற்றமைக்காக ஒரு பவுண்டு அல்லது 1 நாள்ஜெயில்வாச தண்டனை விதிக்கப்பட்டனர்; இவர்களுள் மிஸ்டர்காந்தியின் பிள்ளையொருவராம். அவர்கள் ஜெயில்வாச தண்டனையை ஏற்றுக்கொண்டனரென்று தெரிகின்றது. தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் இந்துக்களுடைய ஆட்சேபத்தின் மீது அவர்கட்கு அம்மைகுத்துவதைக் கட்டாயப்படுத்தா திருக்கின்றனரென்று தெரிகின்றது. ஜெயிலிலிருக்கும் இரண்டு இந்தியர்கள் அம்மைகுத்திக்கொள்ள மாட்டோமென்று சொல்லவே, அவர்கட்கு அம்மைகுத்தாதுவிட்டனர்.

கதாமஞ்சரி.

இஃதொரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கொண்ட 3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கி யிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பாத கண்டத்தின் வடமேற் றெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்பபாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்பத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமாநந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும். இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

சந்தாவிவரம்.

வருஷம் 1க்கு ரூ.	1	0	0
ஆறு மாதத்திற்கு	0	10	0
தனிப்பிரதி	0	2	0
வெளித் தேசத்திற்கு			
வருஷம் 1-க்கு	1	8	0
ஆறு மாதத்திற்கு	0	14	0
தனிப்பிரதி	0	3	0

விளம்பர விகிதம்

மாதம் 1க்கு பக்கத்திற்கு	1	0	0
" ½ பக்கத்திற்கு	0	10	0
" ¼ பக்கத்திகற்கு	0	6	0
சில்லரை விளம்பரங்ளுக்கு வரி 1க்கு அணா	0	1	0

மானேஜர், லோகோபகாரி ஆபீசு,

கோமளீசுவரன் பேட்டை, சென்னை.